

முத்தமிழறிஞர் கலைஞரின் 103வது பிறந்தநாளை முன்னிட்டு கோவை வடக்கு மாவட்டம், குனியமுத்தூர் பகுதி, சுண்டக்கா முத்தூர், வார்டு எண்: 89ல் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி தலைமையில் பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே.ஈஸ்வரசாமி கலைஞரின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து, அமைப்பு சாரா ஓட்டுனர் அணி பெயர் பலகையை திறந்து வைத்து உறுப்பினர் சேர்த்தல் மற்றும் அணி உறுப்பினர்களுக்கு சீருடை வழங்கி, மரக்கன்றினை நட்டு வைத்தார். இதில் பகுதி கழக செயலாளர் லோகநாதன், மாநகராட்சி மேயர் கா.ரங்கநாயகி ராமச்சந்திரன், துணை மேயர் இரா.வெற்றிச்செல்வன், மாவட்ட பொருளாளர் அப்துல் ரகுமான், மாவட்ட துணை செயலாளர் ஜெயந்தி சக்திவேல், வட்ட செயலாளர் சக்திவேல், பேரூர் கழக செயலாளர் அண்ணாதுரை, நரசிபுரம் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் என்.ஆர்.கார்த்திகேயன், அமைப்பு சாரா ஓட்டுநர் அணி நிர்வாகிகள் சரவணன், மகேந்திரன், வெங்கடேஷ், முருகேசன், கணேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.



காலம் சென்ற நடிகர் ஜூனியர் பாலையா அவர்களின் புதல்வி நிவேதிதா – சுரேஷ் தம்பதியின் திருமண வரவேற்பு நேற்று முன்தினம் (29.06.2026) வானகரத்தில் உள்ள தனியார் திருமண அரங்கில் நடைபெற்றது. தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் எம்.நாசர், துணைத் தலைவர் பூச்சி எஸ்.முருகன் இருவரும் கலந்து கொண்டு தி.மு.க. தலைவரும் முன்னாள் முதலமைச்சருமான மு.க.ஸ்டாலின் அவர்கள் அனுப்பிய திருமண வாழ்த்து செய்தியை வழங்கினார்கள்.

### த.வெ.க. அரசில் சட்டம் - ஒழுங்கு படும் பாடு!

# தமிழ்நாட்டில் ஒரே நாளில் 12 பேர் கொலை!

## நாள்தோறும் குற்றச் சம்பவங்கள் அதிகரிப்பு!

**சென்னை, ஜூலை 2 -**

தமிழ்நாட்டில் ஒரே நாளில் 12 பேர் கொலை செய்யப்பட்டுள்ளனர். ‘இது என்ன உத்தரபிரதேசமா?’ என மக்கள் கொந்தளித்துள்ளனர்.

இது பற்றிய விவரம் வருமாறு :-

கன்னியாகுமரியில் மாவட்டத்தில் நேற்று முன்தினம் 3 பேர் கொல்லப்பட்டுள்ளனர். கண்ணம்பிவிளையில் மது அருந்தும் போது சிங்கம், லிங்கசாமி கொடூரமாக கொல்லப்பட்டார். நாகர்கோவில் அருகே கட்டுமான ஒப்பந்ததாரர் தங்கபாண்டி தலையில் கல்லை போட்டு தொழிலாளர் சரவணக்குமார் கொலை செய்துள்ளார்.

புதுக்கோட்டை மாவட்டம் ஆலங்குடி அருகே 9 வயது சிறுவன் கழுத்தை நெரித்துக் கொலை செய்யப்பட்டுள்ளார். ஓரினச்சேர்க்கைக்கு இணங்க மறுத்த சிறுவனை கொலை செய்த 12ம் வகுப்பு மாணவன் கைது செய்யப்பட்டார்.

தலைநகர் சென்னையில் மேடவாக்கம் அருகே ஆட்டோ ஓட்டுநர் சுரேஷ், அவரது ஆட்டோவிலேயே மர்மமான முறையில் உயிரிழந்து கிடந்தார். செங்கல்பட்டு மாவட்டம் மறைமலைநகர் அருகே ஒடிசாவை சேர்ந்த இளைஞர் முஸ்தாக்ஜ வீடு புகுந்து, அடையாளம் தெரியாத கும்பல் கொலை செய்துள்ளது. காரைக்குடி புது பேருந்து நிலையத்தில் மணிகண்டன் என்ற இளைஞர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

மதுரை மாவட்டம், சோழவந்தானில் சித்திக் என்ற இளைஞரை, அடையாளம் தெரியாத கும்பல் வழிமறித்து படுகொலை செய்தது. ஏற்கனவே கொலை வழக்கில் சிக்கிய சித்திக்கை பழிவாங்கும் விதமாக கொலை செய்யப்பட்டிருக்கலாம் என விசாரணை நடத்தப்பட்டு வருகிறது.

திருவண்ணாமலையில் நிலத்தகராறில் துலுக்கானத்தை, அவரது அண்ணன் மகன் மற்றும் அவரது உறவினர்கள் தாக்கி கொலை செய்துள்ளனர். கள்ளக்குறிச்சி மாவட்டம், உளுந்தூர்பேட்டை அருகே குடும்ப தகராறில் தந்தை ராமசாமியை, மகனே அடித்து கொன்றுள்ளார். பழனி அருகே குடும்பப் பிரச்சினை காரணமாக தங்கையின் கணவர் துர்கைராஜை, மைத்துனரே தலையில் கல்லைப் போட்டு கொலை செய்துள்ளார்.

கிருஷ்ணகிரி அருகே மல்லிகைபாய் தொட்டி கிராமத்தில் குடும்பத் தகராறில் மனைவி சுஷ்மிதாவை கணவரே கொலை செய்துள்ளார். இதன் மூலம் ஒரேநாளில் மட்டும் 12 படுகொலைகள் தமிழ்நாடு முழுவதும் அரங்கேறியுள்ளன.

### அமைச்சரை பதவி நீக்கக் கோரி ஆர்ப்பாட்டம்!

# தி.மு.கழகத்தினரை கைது செய்வதா?

## இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி கண்டனம்!

**சென்னை, ஜூலை 2 -**

**“போதைப் பொருள் பயன்படுத்திய அமைச்சரை பதவி நீக்கம் செய்யக்கோரி நடை பெற்ற ஆர்ப்பாட்டத்தில் தி.மு. கழகத்தினரை கைது செய்தது கண்டனத்திற்குரியது” என்று இந்திய ஐக்கிய கம்யூனிஸ்ட் கட்சி (எம்.கே.) கூறியுள்ளது.**

இதுகுறித்து இக்கட்சியின் தமிழ்நாடு மாநிலச் செயலாளர் எஸ்.பாஸ்கரன் விடுத்துள்ள அறிக்கை வருமாறு:-

சில முக்கிய பிரச்சினைகளை அரசின் கவனத் திற்கு கொண்டு செல்வதற்கோ, அல்லது அரசு பதவியில் உள்ளவர்களின் தவறான செயல்களை கண்டித்தோ, மக்கள் கவனத்தை ஈர்க்கும் வகையில் ஆர்ப் பாட்டம் நடத்துவது என்பது அரசியல் கட்சி களின் ஜனநாயக உரிமை ஆகும்.

ஆனால், அத்தகைய ஜனநாயக உரிமைகளை நசுக்கும் வகையில் ஆர்ப்பாட்டத்திற்கு அனுமதி மறுப்பதும், ஆர்ப்பாட் டத்தில் பங்கெடுப்போரை கைது செய்வதும் ஜனநாயக செயல்பாடுகளை முடக்குவதாகும்.

அந்த வகையில் தமிழ்நாடு அமைச்சர் சரத்குமாரின் செயல்பாடு குறித்து சந்தேகம் கொண்டு திராவிட முன்னேற்றக் கழகம் இன்று நடத்துவதாக அறிவித்திருந்த கண்டன ஆர்ப்பாட்டத்தை தடுக் கும் விதத்தில் நேற்று நள்ளிரவில் ஆர்ப்பாட் டத்திற்கு அனுமதி மறுப் பதும், ஆர்ப்பாட்டடத்தில் பங்குக் கொண்டோரை காவல்துறையினர் முரட்டு த்தனமாக கையாண்டு கைது செய்வதும் அரசியல் அநாகரிகத்தின், அராஜ கத்தின் உச்சமாகும்.

புதிதாக அமைந்துள்ள விஜய் தலைமையிலான அரசு காவல்துறையை ஏவி விட்டு, தி.மு.க. போன்ற பிரதான எதிர்க் கட்சிகளின் ஆர்ப்பாட் டத்தினை நசுக்க முயல் வது என்பது ஜனநாயக படுகொலை என எமது இந்திய ஐக்கிய கம்யூ னிஸ்ட் கட்சி (எம்.கே) கருதுகிறது.

இத்தகைய ஜனநாயக விரோத நடவடிக்கை களை கைவிட்டு, ஜன நாயக மாண்புகளை கடைப்பிடித்து நடக்கு மாறு தமிழ்நாடு அரசினை இந்திய ஐக்கிய கம்யூ னிஸ்ட் கட்சி (எம்.கே) சார்பில் கேட்டுக் கொள்கிறோம்.

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

# “ஜனங்களே.. ஜாக்கிரதை!”

இடைத்தேர்தல் பெரும்பாலும்
உறுப்பினர்கள்
செத்து
வரும்!

நம்
இன்பத் தமிழ்நாட்டில்
இப்போது வரும்
இடைத்தேர்தல்.

ஜனநாயகம்
செத்து
வருகிறது!

ஜனங்களே..
ஜாக்கிரதை!



**கவிஞர்**
**கங்கைமணிமாறன்**
*மயிலாடுதுறை*

# திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரியில் த.வெ.க. ஆட்சியின் நிர்வாகச் சீர்கேடு எதிரொலி!

## தொடர் மின்வெட்டால் கொதித்த பொதுமக்கள் – நள்ளிரவில் சாலை மறியல் போராட்டம்!

திருவள்ளூர், ஜூலை 2-

திருவள்ளூர் மாவட்டம் பொன்னேரி அருகே தொடர்ச்சியாக நீடித்து வரும் மின்வெட்டு, பொது மக்களின் பொறுமையை சோதிக்கும் அளவுக்கு மோசமடைந்துள்ளதாக குற்றச் சாட்டுகள் எழுந்துள்ளன. பலமுறை புகார் அளித்தும் உரிய நடவடிக்கை எடுக்கப்படவில்லை எனக் கூறி, ஆத்திரமடைந்த பொதுமக்கள் நள்ளிரவில் சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தச் சம்பவம், த.வெ.க. அரசின் நிர்வாகத் திறனின்மை மற்றும் மின் வாரியத்தின் செயல்பாடு குறித்து கடும் கேள்விகளை எழுப்பியுள்ளது.

பொன்னேரி அடுத்த கிருஷ்ணாபுரம் பகுதியில் கடந்த சில நாட்களாக பகல், இரவு பாராமல் அடிக்கடி மின்தடை ஏற்பட்டு வருவதாக பொது மக்கள் தெரிவிக்கின்றனர். குறிப்பாக இரவு நேரங்களில் பல மணி நேரம் மின்சாரம் இல்லாததால் குழந்தைகள், முதியோர், நோயாளிகள், மாணவர்கள் மற்றும் வேலைக்குச் செல்வோர் என அனைத்து தரப்பினரும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

செவ்வாய்க்கிழமை இரவு சுமார் 9 மணியளவில் ஏற்பட்ட மின்தடை, நள்ளிரவு 12 மணி வரை நீடித்ததாகக் கூறப்படுகிறது. இதனால் ஆத்திரமடைந்த பொதுமக்கள் பொன்னேரி-செங்குன்றம் சாலையில் திடீரென சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். சுமார் 30 நிமிடங்கள் நடைபெற்ற இந்தப் போராட்டத்தால் அந்தப் பகுதியில் போக்குவரத்து முழுமையாக பாதிக்கப்பட்டது.

போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் கூறுகையில், மின்வாரிய அதிகாரிகளை பலமுறை தொடர்பு கொண்டபோதும், பிரச்சினைக்கு தீர்வு கூறாமல், “மின்தடை தொடர்ந்து இருந்தால் உங்கள் வீட்டிற்கு இன்வெர்ட்டர் வாங்கிக் கொள்ளுங்கள்” என அலட்சியமாக பதிலளித்ததாக குற்றம் சாட்டினர். மக்களின் துயரத்தை உணராமல் அதிகாரிகள் செயல் படுவதாகவும் அவர்கள் வேதனை தெரிவித்தனர்.

“இரவு முழுவதும் தூங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. சிறு குழந்தைகள் முதல் முதியோர் வரை அனைவரும் மின்வெட்டால் கடுமையாக அவதிப் படுகின்றனர். பலமுறை புகார் அளித்தும் அரசும் அதிகாரிகளும் எங்களது பிரச்சி னையை கண்டு கொள்ளவில்லை” என்று போராட்டத்தில் ஈடுபட்ட பொதுமக்கள் ஆதங்கம் தெரிவித்தனர்.


தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலும் தொடர்ச்சியான மின்வெட்டு குறித்த புகார்கள் அதிகரித்து வரும் நிலையில், அத்தியாவசியமான மின்சார சேவையைக் கூட சீராக வழங்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக பொதுமக்கள் விமர்சித்து வருகின்றன. மக்களின் அன்றாட வாழ்க்கையை முடக்கிவரும் இந்தப் பிரச்சினைக்கு உடனடி மற்றும் நிரந்தரத் தீர்வு காணாமல் அரசு அலட்சியமாக செயல் படுகிறது என்ற குற்ற ச்சாட்டும் வலுத்து வருகிறது.

பொதுமக்களின் அடிப்படைத் தேவையான மின்சார விநியோகத்தைக் கூட உறுதி செய்ய முடியாத நிலை உருவாகியிருப்பது, த.வெ.க. அரசின் நிர்வாகத் திறனை கேள்விக்குறியாக்கியுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கருத்துகள் எழுந்துள்ளன. தொடர்ச்சியான மின்வெட்டு, அதிகாரிகளின் அலட்சிய அணுகுமுறை, தீர்வு காணப்படாத புகார்கள் ஆகியவை இணைந்து, ஆட்சியின் செயல்பாடு மீதான மக்களின் அதிருப்தியை மேலும் தீவிரப்படுத்தியுள்ளதாக கூறப்படுகிறது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### புலவர் கோவிந்தன்

### ஜூலை 2 (1991)



1937ஆம் ஆண்டில் தமது இருபதாவது வயதில் பொதுவாழ்வில் அடியெடுத்து வைத்தவர். பேரறிஞர் அண்ணாவின் தம்பியாக, தலைவர் கலைஞரின் உற்ற தோழனாக இருந்து இளமை மிடுக்கு மாறாமல், கழக அடலேறென அயர்வின்றி பணியாற்றியவர்.

1958ல் திருவத்திபுரம் ஊராட்சி மன்ற உறுப்பினராகவும் 1962லிருந்து தொடர்ந்து பத்தாண்டுகள் தமிழக சட்டமன்ற உறுப்பினராகவும், 1967ல் சட்டப்பேரவையின் துணைத் தலைவராகவும், 1969 பிப்ரவரி முதல் பேரவையின் தலைவராகவும் பொறுப்பேற்று மாற்றுக் கருத்துக் கொண்டோரும் போற்றும் வகையில் திறம்பட பணியாற்றியவர்.

பேரறிஞர் அண்ணாவிடம் நெருங்கிப் பழகக் கூடிய வாய்ப்பைப் பெற்றவர்.

தலைவர் கலைஞர் அவர்கள் 1989ஆம் ஆண்டு கழகம் நடத்திய முப்பெரும் விழாவில் இவருக்கு “அண்ணா விருது” வழங்கி சிறப்பித்தார்.

“கழகத்தையும் பொதுப்பணியையும் இரு கண்களாகக் கொண்டு செயலாற்றிய அந்தச் செந்தமிழ் அறிஞரின் புகழ் என்றும் நிலைக்கும்!” என தலைவர் கலைஞர் அவர்கள் இரங்கல் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

### மின் கழக தொ.மு.ச.

# எல்.குமாரசாமி மறைவு!

## கழகத்தினர் அஞ்சலி!

சென்னை, ஜூலை 2 -

தொ.மு.ச. தமிழ்நாடு மின்சார வாரியத் தொழிலாளர் முன்னேற்றச் சங்கத்தின் மூத்த உறுப்பினரும், பல்வேறு பொறுப்புகளை திறம்பட வகித்து, தொழிலாளர் நலனுக்காக தன்னலமின்றி அர்ப்பணிப்புடன் பணியாற்றியவருமான எல். குமாரசாமி அவர்கள் 29.06.2026 அன்று இயற்கை எய்தினார் என்பதை மிகுந்த வேதனையுடனும் ஆழ்ந்த வருத்தத்துடனும் தெரிவித்துக் கொள்கிறோம்.

எல்.குமாரசாமி அவர்கள் சங்கத்திற்கும், தொழிலாளர் இயக்கத்திற்கும் திறம்பட பணியாற்றியவர். இச்செய்தியறிந்ததும் கழகத்தினர் தொழிலாளத் தோழர்கள் திரளாகச் சென்று மறைந்த எல்.குமாரசாமி அவர்கள் உடலுக்கு மலர் மாலை வைத்து இறுதி அஞ்சலி செலுத்தினர்.




அன்னாரின் இறுதி ஊர்வலம் மற்றும் தகன நிகழ்வு 30.06.2026 (செவ்வாய்க்கிழமை) மாலை 4.00 மணிக்கு வேளச்சேரியில் நடைபெற்றது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருவரங்கம் க.இராசவேலு

### ஜூலை 2 (2013)



நீதிக்கட்சி குடும்பத்தைச் சேர்ந்த இவர், பள்ளிப் பருவத்திலேயே திராவிட இயக்கத்தில் தன்னை இணைத்துக் கொண்டு, பின்னர் கழகம் துவங்கப்பட்ட போதே, கழகத்தில் இணைந்து பணியாற்றத் தொடங்கியவர்.

திருவரங்கம் பகுதியில் கழகம் வளர பாடுபட்ட மூத்த முன்னோடிகளில் இவரும் ஒருவர்.

மதி எனும் இதழை நடத்தியும், நாடகங்கள் எழுதி அதில் நடித்தும், ‘செண்பகத் தமிழ் அரங்கு’ எனும் தமிழ் அமைப்பினை தொடங்கி, அதன் மூலம் ஆயிரக்கணக்கான தமிழிலக்கியக் கூட்டங்கள் நடத்தி தமிழ் வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் நகர்மன்ற எதிர்க்கட்சித் தலைவராக பணியாற்றி அந்நகர வளர்ச்சிக்கு பாடுபட்டவர்.

திருவரங்கம் ரங்கநாதர் கோவில் அறங்காவலர் குழுத் தலைவராக பொறுப்பு வகித்தவர்.

2010ல் தமிழ்ச் சான்றோர் பெருமக்களுக்கு வழங்கும் விழாவில் ‘அகவை முதிர்ந்த தமிழறிஞர்’ எனும் விருதினை கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வழங்கப்பட்டு சிறப்பிக்கப்பட்டவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**